21.11.2025
OS. No.393/2024
**வா.சா.1 –** திரு.குணசேகரன், த/பெ.மருதராசு

(சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை தொடர்ச்சி செய்யப்படுகிறது.)

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி:-**

பிரதிவாதியை எனக்கு கடந்த ஒரு வருட காலமாக தெரியும். பிரதிவாதியை நான் கடந்த 21.07.2024 அன்று பார்த்தேன். நான் அன்பில் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியில் பணியாற்றுகிறேன். நான் அலுவலக உதவியாளராக வேலை பார்க்கிறேன். எனது மாத சம்பளம் ரூபாய் 25000 ஆகும். ஒவ்வொரு மாதமும் ரூபாய் 15,000 வீதம் சேமித்து வருகிறேன். நான் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியில் நிரந்தர பணியாளர் ஆவேன். அந்த கூட்டுறவு வங்கியில் குமார் என்ற ஒரு நபர் செயலாளராக வேலை பார்த்தாரா என்று எனக்கு தெரியாது. எனக்கு சொந்த ஊர் அன்பில் ஆகும். குமார் என்று சொல்லப்படும் நபர் அன்பிலை சேர்ந்தவர் என்றால் சரிதான். அவர் அடுத்த தெருவில் தான் வசித்து வருகிறார். பிரதிவாதியின் சகோதரியும் குமாரும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியில் வேலை பார்த்து வந்தார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அந்த குமாருக்கும் பிரதிவாதியின் சகோதரிக்கும் இடையில் கொடுக்கல் வாங்கல் பிரச்சனை இருக்கிறது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் இருக்கக்கூடிய கையொப்பம் என்னுடையது இல்லை. 30.12.2023 அன்று ஒரு கிரைய ஒப்பந்தம் எனது நண்பர் பிரபாகரன் பிரதிவாதியுடன் ரூபாய் 23 லட்சத்திற்கு பிறப்பித்துக் கொண்டார் என்றால்

அது பற்றி எனக்கு தெரியாது. நான் பணி ஓய்வு பெற்ற பிறகு வட்டிக்கு கொடுத்து வாங்கும் தொழில் செய்து வருகிறேன் என்றால் இல்லை. பிரதிவாதி அவருக்கு சொந்தமான வீட்டை ரூபாய் 30 லட்சத்திற்கு விற்பனை செய்யப் போவதாக கூறினார். பிரபாகரன் இருந்து அந்த வீட்டை ரூபாய் 23 லட்சம் என்று பேசி முடித்து விட்டார். நான் தாக்கல் செய்த சத்திய பிரமாண வாக்குமூலம் பக்கம் இரண்டு பத்தி நான்கில் 9வது வரியில் கடனை தீர்ப்பது பொறுத்து கேட்டதற்கு தீர்த்து தருவதாக வாக்குறுதி அளித்து வந்தால் என்று கூறியிருக்கிறேன். அந்த தேதியை சத்திய பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. நான் பிரதிவாதிக்கு எந்தெந்த தேதிகளில் சென்று பணம் கொடுத்தேன் என்று சொன்னால் கடந்த 22.07.2024 அன்று ரூபாய் 10 லட்சமும், 24.07.2024 அன்று ரூ.50,000/-மும் 26.07.2024 அன்று ரூ.8,00,000/-மும் கொடுத்தேன். நான் கூறிய பணங்களை யார் முன்பாக வைத்துக் கொடுத்தேன் என்றால் பிரபாகரன் முன்பு வைத்து கொடுத்தேன். நான் கொடுத்த பணங்கள் அனைத்தும் ரூபாய் 500 நோட்டு ஆகும். நான் வருமான வரி செலுத்தவில்லை. ரூபாய் இரண்டு லட்சத்திற்கு மேல் ரொக்கமாக கொடுக்கக் கூடாது என்ற விபரம் எனக்கு தெரியும். ஆனால் நான் ரொக்கமாகத்தான் கொடுத்தேன். ரூபாய் இரண்டு லட்சத்திற்கு மேல் ரொக்கமாக கொடுப்பது வருமான வரிச் சட்டம் பிரிவு 270ன் படி தண்டனைக்குரிய குற்றம் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. எனக்கு பணம் எவ்வாறு வந்தது என்று நான் தாக்கல் செய்த சத்திய பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. வருமானத்தை

குறிப்பிட்டுச் சொல்லாத காரணத்தினால் நான் ஆவணத்தை உற்பத்தி செய்து இருக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. கிரைய ஒப்பந்த பத்திரத்தில் யாரெல்லாம் சாட்சிகளாக கையொப்பம் செய்து இருக்கிறார்கள் என்று சொன்னால் பிரபாகரன் மற்றும் ராஜேந்திரன் கையொப்பம் செய்திருக்கிறார்கள். பிரபாகரன் எந்த ஊரை சேர்ந்தவர் என்றால் அவர் கீழ அன்பிலை சேர்ந்தவர் ஆவார். கிரைய ஒப்பந்த பத்திரத்தில் இருக்கக்கூடிய கையொப்பம் பிரதிவாதியின் கையொப்பம் கிடையாது என்றும் நான் மோசடியாக அந்த கையொப்பத்தை போட்டு இருக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. அந்த பத்திரத்தில் இரண்டாவது தாளில் இரண்டாவது பார்ட்டி என்ற வார்த்தை திருத்தப்பட்டு இருக்கிறது என்று சொன்னால் இல்லை. சொத்து விபரத்தில் அரியலூர் என்ற விவரம் திருத்தப்பட்டு இருக்கிறது என்றால் சரிதான். கிரைய ஒப்பந்த பத்திரத்தில் நான் பின்னிட்டு பணம் ரூபாய் 50 ஆயிரம் கொடுத்த போதும் ரூபாய் 8 லட்சம் கொடுத்த போதும் அந்த இடத்தில் பிரபாகரன் மற்றும் ராஜேந்திரன் சாட்சிகளாக கையொப்பம் செய்திருக்கிறார்கள். கிரைய ஒப்பந்த பத்திரத்தை யார் எழுதினார்கள் என்றால் பூவாளுரை சேர்ந்த பத்திர எழுத்தர் அன்பு என்ற நபர் ஆவார். கிரைய ஒப்பந்த பத்திரத்தை பூவாளுரில் உள்ள பத்திர எழுத்தர் அலுவலகத்தில் வைத்து தயாரித்த போது நானும் பிரதிவாதியும் பிரபாகரன் மற்றும் ராஜேந்திரன் ஆகியோர்கள் இருந்தோம். அந்த பத்திர எழுத்தரை அழைத்து விசாரித்தால் பிரதிவாதி கிரைய ஒப்பந்த பத்திரத்தில் கையொப்பம் செய்தாரா என்பது தெரியவரும் என்றால் சரிதான். பிரதிவாதி பத்திர எழுத்தர் அலுவலகத்தில் வைத்து தான்

அந்த ஆவணத்தில் கையொப்பம் செய்தார். வீட்டில் வைத்து தான் கையொப்பம் செய்தார் என்று ஒரு மனு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். எனக்கு சொந்தமாக அரை ஏக்கர் வயல் உள்ளது. மூன்று ஏக்கர் ஒத்திக்கு எடுத்து விவசாயம் செய்கிறேன். சங்கர் என்ற ஒரு நபரிடம் நான் ஒத்திக்கு எடுத்து விவசாயம் செய்கிறேன். வழக்கு சொத்து வீடு ஆகும். அதன் பரப்பளவு 4 ஆயிரம் சதுர அடி ஆகும். அதன் சர்வே எண் 84/2 ஆகும். நான் கடந்த மூன்று வருட காலமாக சாகுபடி செய்து வருகிறேன். சுமார் மூன்றரை ஏக்கர் பரப்பளவில் விவசாயம் செய்கிறேன். மூன்றரை ஏக்கர் நிலத்திலும் நெல் பயிர் சாகுபடி செய்கிறேன். அது இருபோக வயல் ஆகும். மூன்று ஏக்கர் நிலத்திலும் விவசாயத்தின் மூலம் எனக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூபாய் ஒன்றரை லட்சம் வரை கிடைக்கும். ஏக்கர் ஒன்றுக்கு விவசாயத்திற்கு ரூபாய் 20000 வரை செலவு ஆகும். எனக்கு விவசாய வருமானம் எதுவும் கிடையாது என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. கடந்த 22.07.2024 அன்று பிரதிவாதி என்னுடன் எந்த ஒரு கிரைய ஒப்பந்த பத்திரமும் பிறப்பித்துக் கொள்ளவில்லை என்றும் வழக்கிற்காக நான் பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதிக்கு சொத்தை விற்பனை செய்ய வேண்டிய அவசியம் கிடையாது என்று சொன்னால் சரியல்ல. குமார் பிரபாகரன் ஆகிய இருவரும் பிரதிவாதியின் சகோதரிக்கு பழக்கமானவர்கள் என்றும் அவர்களின் வரவு செலவு கணக்குக்காக பிரதிவாதியின் கையொப்பத்தை மோசடியாக போட்டு நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பிரபாகரனும் குமாரும் இன்று

நீதிமன்றத்திற்கு என்னுடன் வந்தார்கள் என்றால் இல்லை. அவர்கள் வந்தார்கள் என்றும் நான் தற்போது வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நீதிமன்றத்திற்கு ஒவ்வொரு வாய்தாவிற்கும் பிரபாகரனும் குமாரும் என்னுடன் இணைந்து வருகிறார்கள் என்று சொன்னால் சரியல்ல. நான் பொய்யாக வழக்கை தாக்கல் செய்திருப்பதால் நான் தாக்கல் செய்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. எனது வழக்கறிஞர் மூலம் நான் அறிவிப்பு அனுப்பியவுடன் பிரதிவாதி என்னை அணுகி கேட்டபோது பேசி முடித்துக் கொள்ளலாம் என்று சொன்ன காரணத்தினால் தான் அவர் பதில் அறிவிப்பு அனுப்பாமல் இருந்து விட்டார் என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை:-</u>** இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு கைரேகை/கையொப்பம் செய்யப்பட்டது.

(ஓம்.).XXXXX,
முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.